# புதிய சவால்

மனித வரலாற்றில் புதிய சவால் ஒன்று தோன்றியிருப்பதாக வல்லுனர்கள் கருதுகின்றனர். அச் சவால் இது தான்: உலகின் மக்கள் தொகை இன்று எழு நூறு கோடியை, அதாவது ஏழு பில்லியன்களைப் (7 **billions**) பிடித்து விட்டது. இந்த ஏழு பில்லியன் சனங்களையும் வாழ வைக்க இந்த உலகத்தால் முடியும். நாங்கள் வாழும் பூமிக்கு அதற்கான சக்தி இருக்கின்றது. ஆனால் மக்கள் தொகை எட்டு பில்லியன்களைத் தாண்டி ஒன்பதை நோக்கிச் செல்லும் நிலை வந்தால், அந்த நிலையைத் தாங்க பூமியால் இயலாது என்று கூறப் படுகின்றது.

ஏற்கனவே பல நாடுகளை எடுத்துக் கொண்டால் அதற்கான முன் அறிவிப்பு அடையாளங்கள் தென்படுகின்றன. சிரியா நாடு இதற்கு ஓர் உதாரணமாகக் காட்டப் படுகிறது: கிராமங்களில் வாழ முடியாமல், ஐந்து மில்லியன் சிரியா நாட்டு விவசாயிகள் அந்நாட்டுத் தலை நகராகிய தமாஸ்கஸ் நகரில் வந்து குடி புக ஆரம்பித்தனர். மக்கள் நெருக்கம் அதிகமாக, அந்நாட்டில் சண்டைக்கு வித்திடப் பட்டது. கையில் காசில்லாத ஏழைகள் அனைவரும் ஒன்று சேர்ந்ததனால், நாடு போர்க்களமாக மாறி விட்டது என்பதே உண்மை என்று பேசப் படுகிறது.

தென் சூடான் நாட்டில் இரண்டு கட்சிகள் ஒன்றையொன்று மோதிக் கொள்கின்றன. தாங்கள் மோதிக் கொள்வதின் அடிப் படைக் காரணம் நாட்டில் போதுமான வளமை இல்லாமை (**lack of resources**) என்று ஒரு கட்சியின் தலைவரே மேல் நாட்டு சமூகத் தொடர்பு சாதனங்களிடம் ஒத்துக் கொண்டுள்ளார். அதாவது, அந் நாட்டின் சனத் தொகை நாட்டின் சக்தியை மீறிப் போய் விட்டது என்பதே இதன் அடையாளமாகும்.

மக்கள் தொகை பெருகிப் போனால், காடுகள் அழியும். வன விலங்குகள் இல்லாமல் போகும். மழைப் பொழிவு குறைவாகும். புதிதாக எழுந்து வரும் தலைமுறைகள் நன்றாக உண்ண வேண்டும், மேற் படிப்பு படிக்க வேண்டும், உயர்ந்த வேலைகளில் அமர வேண்டும்: யார் இவர்களுக்கு இதையெல்லாம் செய்வது? இவ்வாண்டு ஆப்பிரிக்காவில் சூடான், சொமாலியா, நைஜீரியா, மேலும் ஆசியாவில் யெமென், ஆகிய நாடுகளில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. மேலும், சாட் (**Tchad**), கெமெரூன் (**Cameroun**), நிஜர் (**Niger**) ஆகிய நாடுகளில் வரட்சி உண்டாகும் அபயம் எழுந்துள்ளது.

இன்று ஆப்பிரிக்கா, நாளை ஆசியா என்று கூறப் படுகின்றது. அப்படியானால், சிறிய தீவான இலங்கையில் மக்கள் தொகை பெருகி மீண்டும் சண்டை வரும் வாய்ப்பு உள்ளதா? 1970-ஆம் ஆண்டுகளில் இவ்வுண்மையை ஏற்கனவே உய்த்துணர்ந்த இந்திரா காந்தியின் இந்தியாவும், மேலும் மாசேதுங்கின் சீன நாடும் மக்கள் தொகையைக் கட்டுப் படுத்த எடுத்துக் கொண்ட முயற்சிகள் எம் அனைவருக்கும் தெரிந்த விடயமே. இதனால் இவ்விரு நாடுகளும் பொருளாதார முன்னேற்றத்துக்கு அடித்தளமிட்டதாகவும், அன்று எடுத்த முயற்சிக்கு இன்று கை மேல் பலன் கிடைக்கின்றது என்றும் கூறப்படுகின்றது. வளர்ச்சி பெற்ற நாடுகளிலும், சீனா, ரஸ்யா போன்ற நாடுகளிலும் விரைவில் மில்லியன் கணக்கில் மக்கள் தேவைப் படுவார்கள் என்பதும் உண்மையே. ஒரு சிலர் செவ்வாய்க் கிரகத்தில் போய் வாழலாம் என்று கனவு காண்கின்றனர். எனவே இறைவன் உலகத் தலைவர்களுக்கு வழி காட்டட்டும் என்று மன்றாடுவோம். படைத்தவனுக்குப் பாதுகாக்கவும் தெரியும் என்று சொல்வார்கள். அவர் கையில் உலகின் எதிர் காலத்தை ஒப்படைப்போம். சமாதானமும், மகிழ்ச்சியும், வளர்ச்சியும் அவரின் ஆசீராக மக்கள் அனைவருக்கும் உரித்தாவனவாக.

**ev. Fr. Tiburtius Fernandez. SMA**